**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**STC.NO- 387/2023**
**Dated :11.03.2026**
**Deposition of witness for : P.W.1**

**List of Witness LW1 Examined as PW1 (Defacto Complainant)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தாமோதரன் | வயது | : | 38 |
| தந்தை பெயர் | : | பெருமாள் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | சொக்கநாதப்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர்)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 05.01.2023 ஆம் தேதி, மதியம் சுமார் 12.30 மணியளவில் நான் எனது வயலில் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது எதிரிகள் சகுந்தலா, கண்ணகி, மலர்விழி, சிவகாமி ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து, தேவுடியா மகனே என்று தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். எதிரிகள் நால்வரும் சேர்ந்து, கருங்கல்லை எடுத்து என் மீது வீசினார்கள். அதில் எனக்கு வலது முழங்கையிலும், வலது முழங்காலிலும், இடது பக்க மார்பு பகுதியிலும் காயம் ஏற்பட்டது. சத்தம் கேட்டு, எனது அண்ணன் ராஜ்மோகன் சம்பவ இடத்திற்கு வந்தார், அப்போதுஎதிரிகள் நால்வரும் என்னைப்பார்த்து இந்த வாட்டி நீங்க தப்புச்சிட்டிங்க, என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள். பின்னர் என் அண்ணன், ஆதனக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக என்னை அழைத்துச் சென்றார். பின்னர் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமனைக்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டேன். நான் சிகிச்சையில் இருந்த போது, போலிசார் என்னை விசாரித்து, வாக்குமூலம் பெற்றார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இந்த புகார் வாக்குமூலம் நான்

கொடுத்தது தான். **(மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

## <u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) நானும் எதிரிகளும் ஒரே கிராமத்தினை சேர்ந்த உறவினர்கள் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் எழுதப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றால் சரிதான். என்ன பெயர் கொண்ட காவல் அதிகாரி அதை எழுதினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான், போலிசார் தான் எழுதினார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு மறுநாள் தான் புகார் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் சரிதான். CC 175/2023 என்ற வழக்கு என் மீதும் எனது சகோதரர்கள் மீதும் இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். நாங்கள் எதிரிகளை மண்வெட்டி பிடி மற்றும் கல்லால் அடித்து காயம் ஏற்படுத்தியதாக அந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் எதிரிகளை கல்லால் அடித்து காயப்படுத்தி அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்கள் என்றால் சரியல்ல.

2) எங்களுக்கும் எதிரிகளுக்கும் சொத்து சம்மந்தப்பட்ட பிரச்சினை இருந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் சம்மந்தமாக, OS 273/1998 இல் நிறைவேற்று மனு எண் 21/2020 நடைபெற்றது என்றால் வழக்கு முடிந்து விட்டது. மேற்படி நிறைவேற்று மனுவில் என்னையும் எனது சகோதரர்களையும் உரிமையியல் சிறையில் 15 நாட்கள் காவலில் வைக்க உத்தரவு ஏற்பட்டதால், அதில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்து, அதற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வெளிப்புறக்காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, காயங்கள் இருந்தது. எனக்கு வெளிப்புறக்காயங்கள் எதுவும் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நானும் எனது சகோதரர்களும் சேர்ந்து, எதிரிகளுக்கு சொந்தமான சொத்தை அபகரிப்பதற்காக அவர்கள் சொத்தில் அத்து மீறி நுழைந்து, கட்டிடம் கட்ட முயற்சி செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

3) 4ஆம் எதிரி சகுந்தலாவிற்கு சுமார் 70 வயது இருக்குமா என்றால் எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எங்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கில் இருந்து தப்பிப்தற்காக வெளிப்புறக்காயம் எதுவும் இல்லாமல் மருத்துவமனையில் சேர்ந்து பொய்யாக புகார் அளித்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எந்த தேதியில், எந்த பெயர் கொண்ட போலிசார் எந்த இடத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் 06.01.2023 ஆம் தேதி, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் விசாரித்தார்கள், விசாரித்த போலிசாரின் பெயர்

தெரியவில்லை. அதற்கு பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.2 திரிசங்கு எங்கள் வீட்டில் என்ன வேலை செய்தார் என்றால் அவர் எங்கள் வீட்டில் வேலை செய்யவில்லை.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.11 15:38:19 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**STC.NO- 387/2023**
**Dated :11.03.2026**
**Deposition of witness for : P.W.2**

**List of Witness LW3 Examined as PW2 ( Eye Witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரிசங்கு | வயது | : | 60 |
| தந்தை பெயர் | : | பெரியசாமி | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | சொக்கநாதப்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர்)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 – ஐ எனக்கு தெரியும். சாட்சி கலியபெருமாள் எனக்கு தெரியும், அவர் இறந்துவிட்டார். கடந்த 05.01.2023 ஆம் தேதி, மதியம் சுமார் 12.30 மணியளவில், ராஜ்மோகன் அவரது வயலில் வேலை செய்து கொண்டிருந்தார். அப்போது எதிரிகள் சகுந்தலா, கண்ணகி, மலர்விழி, சிவகாமி ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து, தேவுடியா மகனே என்று தாறுமாறாக வார்த்தைகளால் பேசினார்கள். ரமேஷ் கொல்லையில் கட்டியிருந்த கட்டிடத்தின் மீது கல்லை எறிந்தார்கள். அப்போது ரமேஷ் அங்கு ஓடி வந்தார். எதிரிகள் கல்லை எறிந்ததில், ராஜ்மோகனுக்கு வலது கை, நெஞ்சு, முழங்காலில் காயம் ஏற்பட்டது. பின்னர் ரமேஷ், காயம்பட்ட ராஜ்மோகனை ஆதனக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1) 05.01.2023 ஆம் தேதி, மதியம் 01.00 மணியளவில் நடைபெற்ற சம்பவம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் மதியம் 12.30 மணியளவில் தான் சம்பவம் நடைபெற்றது. அ.சா.1 மற்றும் அவர் சகோதரர்கள் எதிரிகளை மண்வெட்டி மற்றும் கல்லால் தாக்கியதில் எதிரி

சகுந்தலா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட விபரம் தெரியுமா என்றால் எதிரிகள் அவர்களை அவ்வாறு கல்லால் தாக்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில், நான் யார் வீட்டிற்கு வேலைக்கு சென்றேன் என்றால் ரமேஷ் விட்டிற்கு வேலைக்கு சென்றேன். அ.சா.1 இன் அண்ணன் தான் ரமேஷ் என்றாலும் அவர் எனக்கு முதலாளி என்றாலும் சரிதான். எத்தனை வருடங்களாக ரமேஷ் வீட்டில் வேலை செய்து வருகிறேன் என்றால் 1962 ஆம் ஆண்டிலிருந்து வேலை செய்து வருகிறேன்.

2) எனது முதலாளி ரமேஷ் சொல்வதை நான் கேட்பேன் என்றால் சரியல்ல, நான் கேட்கமாட்டேன். நான் எனது முதலாளி ரமேஷ் கேட்டுக்கொண்தற்கு இணங்க சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. கடந்த 25 வருடங்களாக எதிரிகளுக்கும் சாட்சிகளுக்கும் இடையே சொத்துப்பிரச்சினை இருந்து வரும் விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.11 15:38:29 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**STC.NO- 387/2023**
**Dated :11.03.2026**
**Deposition of witness for : P.W.3**

**List of Witness LW4 Examined as PW3 ( Mahazar Witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவசாமி | வயது | : | 83 |
| தந்தை பெயர் | : | ஆறுமுகம் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | சொக்கநாதப்பட்டி | தொழில் | : | வேலை எதுவும் செய்யவில்லை |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர்)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது சாட்சிக் கையொப்பம் என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**( சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya sakshya Adhinayam'2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால், நீதியின் பொருட்டு, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 06.01.2023 ஆம் தேதி மதியம் 03.30 மணியளவில் நானும் குமார் என்பவரும் கொல்லையில் வேலை முடித்து விட்டு, வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது, சம்பவ இடத்தில் இருந்த ஆதனக்கோட்டை போலிசார் குற்ற எண் 4/2023 வழக்கில், எங்கள் முன்னிலையில், சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலிசாரிடம் வாக்குமூலம் அளித்தேன் என்றால் இல்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.11 15:38:40 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**